
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1106

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

43

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!




# ஓ.பி.சி. மருத்துவ மாணவர் உரிமை

# சமூகநீதியை சாதித்த கழகம்!

*2021*-ஆம் ஆண்டு, ஜூலை 29-ஆம் தேதி, ஒன்றிய அரசு மருத்துவக் கல்வியில் அனைத்திந்திய தொகுப்பு இடங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான 27 சதவிகித இட ஒதுக்கீடு அறிவிப்பினை வெளியிட்டது.

இந்த அறிவிப்புக்குப் பின்னால் மிகப் பெரிய போராட்டங்கள் நடைபெற்றதை, கடந்த வாரங்களில் பார்த்தோம். உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற சட்ட வாதங்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற முழக்கங்கள், மாணவர்களின் உரிமைக்குரல் என ஏராளமான அழுத்தங்களுக்குப் பின்னரே, ஒன்றிய அரசு இந்த அறிவிப்புக்கு இறங்கி வந்தது.

ஆனால், யாரும் எதிர்பார்க்காத வகையில், மருத்துவ மாணவர் சேர்க்கையில் அனைத்திந்திய தொகுப்பில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் அறிவிப்போடு சேர்த்து, உயர்சாதி ஏழை மாணவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் அறிவிப்பினையும் வெளியிட்டது ஒன்றிய அரசு.

### குறுக்கு வழியில்

2019-ஆம் ஆண்டில், பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு (EWS ) என அரசியல் சட்டத்தைத் திருத்தி, இட ஒதுக்கீட்டின் நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் பெரும் போராட்டத்திற்குப் பின் கிடைத்த, அனைத்திந்திய தொகுப்பு இட ஒதுக்கீட்டிலும் 10 சதவிகிதம், உயர்வகுப்பினருக்கு எனப் பின்புற வாசலைத் திறந்துவிட்டனர்.

இந்த அறிவிப்புக்கு எதிராக சென்னை நீதிமன்றத்தில் வாதாடி, 10 சதவிகித இடஒதுக்கீடு வழங்கக் கூடாது என ஒன்றிய அரசுக்கு எதிராகத் தீர்ப்பினைப் பெற்றது கழகம். அந்தத் தீர்ப்பு வந்ததும், அதற்கு எதிராகவும் ஒன்றிய அரசு உடனடியாக உச்ச நீதிமன்றம் சென்றது. அதாவது, எந்தக் காரணத்தைக் கொண்டும் ஓ.பி.சி. இடஒதுக்கீட்டை வழங்கிவிடக் கூடாது என்பது நோக்கமாக இருந்தது.

இதற்கிடையே, ‘அனைத்திந்திய தொகுப்பில் 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் ஒன்றிய அரசின் அறிவிப்பு செல்லாது’ என, சில மருத்துவ மாணவர்கள் உச்ச நீதிமன்றம் சென்றனர். அவர்கள் வேறு யாருமில்லை; 10 சதவிகித உயர்சாதிப் பயனாளிகள்தான். அதாவது, இத்தனை ஆண்டுக் காலமாக இடஒதுக்கீடு வழங்கக் கூடாது, தரம் பாதிக்கப்படும் என்றவர்கள், தங்களுக்குக் கிடைத்த இட ஒதுக்கீடுக்குத் தடை என்றதும் நேரடியாகக் களமிறங்கினர்.

### உள்நோக்கத்துடன் வழக்கு

‘அவர்களுக்கு’ 10 சதவிகித இட ஒதுக்கீடு கேட்காமலேயே அளிக்கப்பட வேண்டும். ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகிதம் என்கிற உரிய இடத்தை அளிக்கக் கூடாது என்கிற இரண்டு மனநிலை கொண்ட இந்த எதிர்மனுதாரர்களின் முதன்மையான நோக்கம், ஓ.பி.சி. இடஒதுக்கீடு அறிவிப்பை ரத்து செய்துவிட்டு, நீட் தேர்வை நடத்த வேண்டும் என்பதுதான். தவிர, மருத்துவப் படிப்பில் இடஒதுக்கீடு தந்தால், தரம் கெட்டுவிடும் என்றும் உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டனர். காலம் காலமாகத் திட்டமிட்டு செய்து வரும் சதிச்செயல் போல இப்போது மருத்துவர்கள் என்கிற பெயரில் உச்ச நீதிமன்றத்தில் நின்றனர்.

நீண்டகால போராட்டத்தின் பயனாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வாய்ப்பை, கிடைக்கச் செய்யக் கூடாது எனப் பின்னுக்கிழுக்கத் துணிந்தனர். இந்த வழக்கிலும், தன்னை இணைத்துக்கொள்ள உச்ச நீதிமன்றத்தில் இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது கழகம். ஆனால், எதிர்மனுதாரர்கள் என்கிற போர்வையில் இருந்த அந்த ‘அவர்கள்’ இந்த வழக்கில் தி.மு.கழகத்தின் சார்பில் ஆஜராக அனுமதிக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் வாதம் வைத்தனர்.

> ‘இட ஒதுக்கீடு தகுதிக்கு எதிரானதல்ல’ என நீதிபதி சந்திரசூட் வழங்கிய தீர்ப்பு, இந்தியா முழுமைக்கும் எதிரொலித்தது. இந்திய சமூக நீதி வரலாற்றில் கிடைத்துள்ள மிக முக்கியமான வெற்றி.

‘மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களும் தொடர்ந்துள்ள வழக்கில், அரசியல் கட்சிகளைத் தலையிட அனுமதிக்கக் கூடாது’ என வாதிட்டனர். அதாவது, இவ்வளவு சட்டப் போராட்டங்களுக்குப் பின்னர், நாம் நகர்த்திக் கொண்டுவந்த ஒரு வெற்றியை, மீண்டும் அதலபாதாளத்தில் தள்ளும் வேலையை அவர்கள் செய்யத் துடித்தனர். அதைத் தடுக்க வேண்டும், சமூக நீதியைக் காக்க வேண்டும் என நாம் நினைத்தால், அதில் அரசியல் கட்சிக்கு என்ன வேலை எனக் கேள்வி கேட்பது அந்த வாதத்தின் மூலமே தெரிந்தது. நமது வாதங்கள் வலுவானது. உரிமைக்காக நிற்பது. அதனால், நம்மை வெல்ல முடியாது என்பது தெரிந்து, நம்மைத் தடுக்க நினைத்தனர்.

### வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு!

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வில் விசாரிக்கப்பட்ட போது, அவர் மிக முக்கியமான ஒரு மேற்கோளை எதிர்த் தரப்பினருக்குக் கூறினார். ‘இந்த இட ஒதுக்கீட்டில் மிகப் பெரிய பங்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உள்ளது’ என்று கூறி, எதிர்த்தரப்பினர் எழுப்பிய கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன், நமது வழக்கறிஞரை வாதிடவும் அனுமதித்தார்.

‘அந்த’ மருத்துவ மாணவர்கள் தரப்பில் இருந்து வாதிட்ட ஷியாம் திவான் என்கிற வழக்கறிஞர், ‘இட ஒதுக்கீட்டின்மூலம் தகுதியும் திறமையும் கெடுகிறது. இட ஒதுக்கீடு கொடுப்பதால் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் வரமாட்டார்கள். இடஒதுக்கீட்டை அனுமதிப்பது நாட்டிற்குக் கேடு! யார் டாக்டர் ஆவது என்கிற வரைமுறை வேண்டாமா? எல்லோரும் டாக்டர் ஆகிவிட முடியுமா? தகுதியற்றவர்கள் மருத்துவர்கள் ஆகி அறுவை சிகிச்சை செய்தால், மருத்துவத்துறைக்குப் பெரும் இழப்பு. மனித உயிர்களுக்குப் பெரும் ஆபத்து’ என்கிற வாதங்களை எல்லாம் வைத்தார். கேட்காமலேயே 10 சதவிகிதத்தை அனுபவிப்பவர்கள், இட ஒதுக்கீட்டால் தகுதி, திறமை பாதிக்கப்படும் என வாதிட்டது வேடிக்கையாக இருந்தது.

‘அவாள்களது’ இந்த வாதங்களை எல்லாம் நமது மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் முறியடித்தார். அரசியலமைப்புச் சட்டத்தின் அத்தனை பிரிவுகளில் இருந்தும், உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளில் இருந்தும் பலமான எதிர்வாதத்தை வைத்து தீர்ப்பைச் சாதகமாகத் திருப்பினார்.

இறுதியில், தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள், ‘திராவிட முன்னேற்றக் கழகம் தொடுத்த வழக்கில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கியது சரியானது’ என்று கூறி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பதிவு செய்தார். 07.01.2022 அன்று சுருக்கமான தீர்ப்பையும், 20.01.2022 அன்று விரிவான தீர்ப்பையும் வெளியிட்டார்.

‘இட ஒதுக்கீடு தகுதிக்கு எதிரானதல்ல’ என நீதிபதி சந்திரசூட் வழங்கிய தீர்ப்பு, இந்தியா முழுமைக்கும் எதிரொலித்தது. ‘இந்திய சமூக நீதி வரலாற்றில் கிடைத்துள்ள மிக முக்கியமான வெற்றி’ என கொண்டாடப் பட்டது. அதற்கு, கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் காட்டிய உறுதியும் வழிகாட்டலுமே காரணம் எனவும் வரலாறு எழுதி வைத்தது.

இன்று, இந்தியா முழுவதும் அனைத்திந்திய மருத்துவத் தொகுப்பில் பிற்படுத்தப்பட்ட சமூகத்துக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டில் படித்துக்கொண்டிருக்கும், இனி படிக்கப்போகும் மருத்துவ மாணவர்கள் ஒவ்வொருவரும் கழகத்தின் போராட்டத்துக்குக் கடமைப் பட்டவர்கள் என்றால் மிகையில்லை.

...தொடரும்

## பி.எம்.கேர்ஸ் என்றால் பதறும் பா.ஜ.க!

பி.எம்.கேர்ஸ் (PM CARES) நிதி, பிரதமரின் தேசிய நிவாரண நிதி (பி.எம்.என்.ஆர்.எஃப்) மற்றும் தேசிய பாதுகாப்பு நிதி (என்.டி.எஃப்) தொடர்பான நாடாளுமன்றக் கேள்விகள் மற்றும் விவகாரங்கள், மக்களவை அலுவல் நடைமுறை விதிகளின் கீழ் அனுமதிக்கத்தக்கவை அல்ல என்று பிரதமர் அலுவலகம் மக்களவைச் செயலகத்திடம் தெரிவித்துள்ளது என ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா பரவலைத் தொடர்ந்து மார்ச் 27, 2020 அன்று பி.எம்.கேர்ஸ் நிதி முன்னெடுப்பை ஒன்றிய அரசு அறிவித்தது. பி.எம்.கேர்ஸ் நிதியின் அதிகாரபூர்வ இணையதளத்தில் கடைசியாக வெளியிடப்பட்ட 2022-23 ஆம் ஆண்டிற்கான ரசீதுகள் மற்றும் கொடுப்பனவு கணக்கு அறிக்கையின்படி, மார்ச் 2023 இறுதியில் மொத்த இருப்பு ரூ.6,283.7 கோடியாக இருந்தது. ஆனால், இந்த நிதி யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது, எவ்வகையில் கொடுக்கப்பட்டது என்ற எந்த விவரமும் ஒன்றிய அரசால் அளிக்கப்படவில்லை. இதுகுறித்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேள்வி எழுப்பியதற்கும் ‘இது அரசு நிதி அல்ல தன்னார்வ நிதி’ என்று கூறி, ஆர்.டி.ஐ. சட்டத்திற்குப் பொருந்தாது எனப் பதிலளித்தது.

இது இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கையாளர் (CAG) மூலம் இந்த நிதி, தணிக்கை செய்யப்படுவதில்லை. மாறாக, ஒரு தனியார் தணிக்கை நிறுவனம் மூலம் தணிக்கை செய்யப்படுகிறது. இப்படி வெளிப்படைத்தன்மையே இல்லாமல் பெரும் நிதியைத் திரட்டிவிட்டு, தற்போது நாடாளுமன்றத்திலும் இதுகுறித்து பதிலளிக்க முடியாது எனக் கூறியிருப்பது, பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. பி.எம்.கேர்ஸ் பற்றி எந்தக் கேள்வியும் எழுப்பவே கூடாது என்ற ஒன்றிய அரசின் உள்நோக்கத்தை, விவாதத்துக்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்துகிறது. பி.எம்.கேர்ஸ் என்றால், பா.ஜ.க. ஏன் பதறுகிறது என்பதே இந்தியா கூட்டணிக் கட்சிகளின் அடிப்படையான கேள்வி.

## ஃப்ளாஷ்பேக்



### நெஞ்சில் பதிந்த நாள்!



ஆர்.கௌதமன்

2017-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளின்போது, கோபாலபுரம் சென்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றேன். தலைவர், மருத்துவ ஓய்வில் இருந்தார். ஓய்வறியா அந்த சூரியனுக்கு திருவள்ளுவர் சிலையைப் பரிசளித்து மகிழ்ந்தேன். தலைவரைக் கண்ட நாள் இன்னும் நெஞ்சில் பதிந்துள்ளது.

**– ஆர்.கௌதமன்,**
**தியாகராய நகர் கிழக்குப் பகுதி,**
**141-வது வட்டப் பகுதி பிரதிநிதி, சென்னை தென்மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### போக்குவரத்துக் கழகங்கள்!

1971-இல் 50 வழித்தடங்களுக்கு மேல் உரிமம் வைத்திருந்தோரின் பேருந்துகளை, நாட்டுடைமை ஆக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அவற்றை மூன்று பெரும் மண்டலங்களாக்கி, சோழன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எனப் பெயர்கள் சூட்டினார். பொதுப் போக்குவரத்து இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்ற தலையாய நோக்கத்துக்காகப் பேருந்து முதலாளிகளின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல், இப்பணிகளைச் செய்து முடித்தார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131